# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# மேட்டூர்,
# தேதி: 31.07.2025
# RLTOP. No. 3/2023
# வழக்கு சாட்சி PW.1– அன்பழகன், த/பெ.சித்தையன்

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**</u>

3) எதிர்மனுதாரர் ஸ்ரீலட்சுமி கோல்டு பைனான்ஸ் என்ற நகைகடையை மனு சொத்தில் வைத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு முறையாக உரிமம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. மனு சொத்திற்கு ஒட்டினார் போல் வடபுறம் 10X10 அடியில் என்னுடைய மற்றொரு கடை உள்ளது என்றால் சரிதான். அது எங்கள் குடும்ப சொத்தில் அமைந்துள்ளது. என் மனுவில் நான் குடும்ப சொத்து என்று குறிப்பிடாமல் அந்த கடையை என்னுடைய சொத்து என்று குறிப்பிட்டு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அந்த கடையை வரி செலுத்தி பார்த்து கொள்வதால் அவ்வாறு சொல்லியுள்ளேன். மனு சொத்தின் சொத்து விவரத்தில் அன்பழகன் வீட்டு பகுதிக்கு மேற்கு என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றும், குடும்ப சொத்து என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) என் சகோதரர் சீனிவாசன் 30.08.2006 ல் என் பெயருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்ததாக ம.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், சால்வன்சிக்காக அவர் மட்டும் எழுதிக்கொடுத்துள்ளார், மற்றவர்கள் எழுதிக்கொடுக்கவில்லை. மனுவில் மனு சொத்து, அதன் அருகிலுள்ள கடை, மற்றும் வீடு எங்கள் குடும்ப சொத்து என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தற்போது வழக்கிற்காக குடும்ப சொத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 3 ல் ஒரு கடை வைத்து பிழைப்பு நடத்த, வாடகைத்தாரரை காலி செய்து மனு சொத்து சுவாதீனம் கிடைக்க மனு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அந்த கடையில் நான் ஏதேனும் கடை வைத்து பிழைத்து கொள்வதற்காக அவ்வாறு சொல்லியுள்ளேன்.

5) மனு சொத்திற்கு அருகிலுள்ள 10X10 அடி அளவுள்ள கடை தற்போது காலியாக உள்ளது என்றால் சரிதான். நான் 2017 ல் மனு சொத்திற்கு பின்புறம் உள்ள இரண்டு தார்சு வீடுகளை போகித்துக்கு விட்டு சென்றுள்ளேன் என்றால் சரிதான், அதில் ஒரு வீட்டை 2 வருடங்களுக்கு முன்பு தான் போகித்து விட்டுள்ளேன். ஜீன் 2017 ல் நான் எனக்கு உடல் நிலை சரியில்லை என்பதற்காகவும், என் மனைவிக்கு சேலத்தில் உதவியாளர் பணி கிடைத்ததாலும் காலி செய்து சென்றுவிட்டேன். 2017 ஜீனில் தான் நான் காலி செய்து சென்றதாக என் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வீடு காலி செய்த சமயத்தில் என் வங்கி புத்தகம், காசோலை புத்தகம் கையெழுத்து செய்தததை எதிர்மனுதாரர் எடுத்துக்கொண்டதாக நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, நாளிதழில் அறிவிப்பு கொடுத்தேன். எதிர்மனுதாரர் என் காசோலையை வங்கியில் செலுத்திய பின்பு தான் அவர் மேற்கண்ட ஆவணங்களை எடுத்து சென்றது எனக்கு தெரியவந்தது. அதன் பிறகு நான் நாளிதழில் அறிவிப்பு கொடுத்தேன், எந்த தேதியில் கொடுத்தேன் என்று எனக்கு நினைவில்லை. வேண்டுமானால் அதை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன்.

6) எதிர்மனுதாரர் காசோலையை வங்கியில் செலுத்தியவுடன் கைபேசியில் அது குறித்து எனக்கு குறுஞ்செய்தி கிடைக்கப்பெற்றவுடன் நான் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் அவ்வாறு எனக்கு எந்த குறுஞ்செய்தியும் வரவில்லை. (தற்போது சாட்சி குறுஞ்செய்தி வந்ததா என்று எனக்கு தெரியவில்லை என்று தெரிவித்தார்). எதிர்மனுதாரர் காசோலையை செலுத்தி அது திருப்பப்பட்டது, அவர் அனுப்பிய வழக்கறிஞர் அறிப்பிற்கு பின்பு தான் தெரிந்து கொண்டேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்ட பிறகு தான் நான் நாளிதழில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் சரிதான்.

7) எதிர்மனுதாரர் மனு சொத்தில் அடகு கடை வைப்பதற்காக 2001 ல் ரூ.300/—க்கு வாடகைக்கு வந்தார் என்றால் முதலில் என் தந்தையிடம் தான் வாடகைக்கு வந்தார்,

2010 ல் தான் என்னிடம் வாடகைக்கு வந்தார், அப்போது வாடகை ரூ.5000/—என்று பேசப்பட்டது. எதிர்மனுதாரர் என் தகப்பனாரிடம் தான் முதலில் வாடகைக்கு இருந்ததாக நான் சொல்லும் விவரம் என் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது வரை எதிர்மனுதாரர் என்னிடம் வாடகையாக ரூ.1000/—தான் பேசி கடை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் 2019 ல் எதிர்மனுதாரர் நகை அடகு கடையில் 198 கிராம் தங்க நகையை அடகு வைத்து ரூ.2,50,000/—பெற்றுள்ளதாக சொல்லியதற்கு ஆதரவாக ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை, மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். நான் என் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எந்த தேதியில் நடையை அடகு வைத்தேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அடகு கடையில் எந்த நகையையும் அடகு வைக்கவில்லை என்றும், எந்த தொகையையும் பெறவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) என்னென்ன நகைகளை அடகு வைத்தேன், மாத வட்டியாக எவ்வளவு கட்டினேன் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் 2019 வரை தவறாது வட்டி கட்டி வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், எங்களுக்குள் அசல் மட்டும் செலுத்துமாறு பேசிக்கொண்டோம்.எதிர்மனுதாரரிடம் நான் என் தொழில் விசயமாக தேவைப்படும் என்று 28.02.2022 ம் தேதியில் ரூ.10 லட்சம் கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு ரூ.100 க்கு ரூ.2 வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, 28.04.2023 என்று பின்தேதியிட்டு மேட்டுர் இந்தியன் வங்கி காசோலை பூர்த்தி செய்து கொடுத்து கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மீண்டும் என் அவசர தேவைக்காக ரூ.10 லட்சம் வேண்டி 18.07.2022 ம் தேதியில் எதிர்மனுதாரரிடம் ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டு, 15.06.2023 என்று பின்தேதியிட்டு மேட்டுர் இந்தியன் வங்கி காசோலை பூர்த்தி செய்து கொடுத்து கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மேற்கண்ட காசோலைகளை வங்கியில் செலுத்தி அது திருப்பபட்டதால், எனக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு பவானி குற்றவியல் நீதிமன்ற

எண்.1ல் என் மீது இரண்டு காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பிறகு தான் கடையை காலி செய்து தரும் படி கோரி இந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9) எனக்கு கடை வைக்க மனு சொத்திற்கு பக்கத்திலேயே காலியாக கடை உள்ளதால், எதிர்மனுதாரரை காலி செய்து கொடுக்கும்படி கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எங்கள் சொத்துக்கள் பிரிபடவில்லை என்று நான் சொல்கையில் இந்த வழக்கை மற்ற என் உடன்பிறந்தவர்களை பிரதிநிதியாக தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் நான் கடனாக பெற்ற ரூ.20 லட்சத்தை வட்டியுடன் திருப்பி செலுத்தும் பட்சத்தில் எதிர்மனுதாரர் கடையை காலி செய்து கொடுக்க தயாராக உள்ளார் என்றால், நான் அவ்வாறு எந்த தொகையையும் கடனாக பெறவில்லை. எதிர்மனுதாரரிடமிருந்து வாங்கிய கடன் தொகையை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.